புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
ज्ञान-विज्ञान विमुक्तये
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

=====================================================================

***ஆதிரை இட்ட பிச்சையும் ஆணாதிக்க அதிகாரமும்***

# Alms-giving of Aathirai and patriarchal power

=====================================================================

***கட்டுரையாளர்***

***முனைவர் ந. இரகுதேவன்,***
***உதவிப்பேராசிரியர்,***
***தமிழியல்துறை,***
***மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21.***

=====================================================================

***ஆய்வுச் சுருக்கம்***

*நீண்ட நெடுங்காலமாகத் தமிழ் மண் பல வழிபாட்டுச் சமயங்களைக் கொண்டு பயணித்து வந்திருக்கின்றன. எப்பொழுதும் ஒற்றைச் சமயத்தை மட்டுமே ஏற்று இந்நிலம் இயங்கியதில்லை என்பதையே ஆவணங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. மனிதர்களைப் பக்குவப்படுத்துவற்கு மதங்கள் தோன்றின என்று சொன்னாலும் மதங்களின் பார்வையில் ஆண் பாலினத்தை ஒருவிதப் பார்வையிலும் பெண் பாலினத்தை சற்று குறைவான பார்வையிலுமே பார்த்துவந்திருக்கின்றன என்பது வெளிப்படையான உண்மை. அந்த வகையில் உலக மதங்களின் ஓர்மைத் தன்மையில் இதையும் உள்ளடக்கலாம். இவற்றின் மத்தியில் பெண்பாலினத்தைப் போற்றுகின்ற சில சமயங்களும் இருந்திருக்கின்றன என்பதை நாம் கட்டாயம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அப்படி இந்திய மண்ணில் தோன்றிய இருபெரும் சமயங்களான சமணமும் பௌத்தமும் பெண்பாலினத்தின் உரிமைகளிலும் உணர்வுகளிலும் தலையிடாமல் அவற்றின் செயல்பாடுகளுக்கு வழி விட்டிருக்கின்றன என்பதை இலக்கியச் சான்றுகளின் வழி ஆய்கின்றது இக்கட்டுரை.*

***குறிப்புச் சொற்கள்***

*தமிழ்மண், சமயம், புத்தம், சமணம், ஒற்றை அடையாளமற்றது, பெண்ணியம்.*

***முன்னுரை***

*மனிதம் சமைக்க வந்த சமயங்கள் பழமைவாதக் கயிற்றின் இறுக்கத்திற்குள் அடைபட்டதோடு சில காலங்களில் அதன் இருப்பு இல்லாமலே போயின என்பதே கால வரலாறுகள். காலத்தின் தேவையினாலும் மக்களின் கொண்டாட்ட மனநிலையில் ஏற்படும் மாற்றத்தினாலும் வழிபாட்டு முறைகள் மாற்றம் கண்டுவருவது இயல்பு. சிலசமயங்களில் சிலருடைய வசதிக்காகவும் சிலருடைய வஞ்சத்தினாலும் பல்வேறுதரப்பட்ட மக்களின் வழிபாட்டு மரபுகள் சமூக ஒற்றுமை வாழ்வியலுக்குத் தேவையிருப்பினும் சில காரணங்களைக் காட்டி அழித்தொழிக்கப்படுகின்றன. தமிழக நில எல்லையைப் பொறுத்தமட்டில் பல்வேறுவிதமான வழிபாட்டு மரபுகளும் வழிபாட்டுக்கூறுகளும் இருந்து வந்துள்ளன. நீண்ட நெடுங்காலமாகத் தமிழ் மண் பல வழிபாட்;டுச் சமயங்களைக் கொண்டே வந்திருக்கின்றன. எப்பொழுதும் ஒற்றைச் சமயத்தை மட்டுமே ஏற்று இந்நிலம் இயங்கியதில்லை என்பதையே ஆவணங்கள் நன்கு புலப்படுத்துகின்றன. மனிதர்களைப் பக்குவப்படுத்துவற்கு மதங்கள் தோன்றின என்று சொன்னாலும் மதங்களின் பார்வையில் ஆண் பாலினத்தை ஒருவிதப் பார்வையிலும் பெண் பாலினத்தை சற்று குறைவான பார்வையிலுமே பார்த்துவந்திருக்கின்றன என்பது வெளிப்படையான உண்மை. அந்த வகையில் உலக மதங்களின் ஓர்மைத் தன்மையில் இதையும் உள்ளடக்கலாம். இவற்றின் மத்தியில் பெண்பாலினத்தைப் போற்றுகின்ற சில சமயங்களும் இருந்திருக்கின்றன என்பதை நாம் கட்டாயம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அப்படி இந்திய மண்ணில் தோன்றிய இருபெரும் சமயங்களான சமணமும் பௌத்தமும் பெண்பாலினத்தின் உரிமைகளிலும் உணர்வுகளிலும் தலையிடாமல் அவற்றின் செயல்பாடுகளுக்கு வழி விட்டிருக்கின்றன என்பதை இலக்கியச் சான்றுகளின் வழி நாம் அறிந்துகொள்ளமுடிகின்றன.*

*தமிழ் மண்ணில் சமணமும் பௌத்தமும் எப்போது நுழைந்தது என்பதில் சிற்சில மாற்றங்கள் இருந்தாலும் சு. வெங்கடேசன் குறிப்பிடுவதுபோல, “கொல்லாமை அஹிம்சை, நிலையாமை ஆகிய கோட்பாடுகளை சமணமும் பௌத்தமும் முன்வைத்தன. இரத்தக்கறை புரண்ட அன்றைய போர் அழிவுச்சூழலில் இந்தக் கோட்பாடுகளின் வளர்ச்சிக்கு சாதகமான புறச்சூழலாக அமைந்தது. பிராமிக் கல்வெட்டு ஆராய்ச்சிகள் சமணமும் பௌத்தமும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலேயே தமிழகத்தில் தன் பதிவிட்டதை எடுத்துக்காட்டுகின்றன. சீனயாத்திரீகர் யுவான் - சுவாங் எழுதிய சரித்திரக் குறிப்புகளும் இந்தச் செய்தியை உறுதிப்படுத்துகின்றன”[1] (சு. வெங்கடேசன், கலாச்சாரத்தின் அரசியல். ப. 58.) என்பதிலிருந்து கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்தே சமண பௌத்தம் என்னும் காலப்பழமை வாய்ந்த இருபெரும்*

சமயத்தின் வீச்சும் தாக்கமும் தமிழகத்தில் இருந்துள்ளதை காப்பியத்தின் வழி உணரமுடிகின்றன. இந்த இருபெரும் சமயங்களும் மக்களின் மொழியோடு மக்களைச் சந்தித்ததன் காரணமாகவே அவை விரைவாக மக்களோடு ஒன்றுவதற்குச் சாத்தியமாயிற்று என்று கூறலாம். சிலமதங்கள் ஆதிக்கம் செலுத்த எண்ணியதைத்தவிர மக்களின் மனத்திலுள்ள மூடநம்பிக்கை சார்ந்த விடயங்களையோ, மக்களிடமுள்ள ஏற்றத்தாழ்வுகளையோ களைவதற்கு முன்வரவில்லை என்பது வெளிப்படை. மாறாக இதுபோன்ற சமூக இழிவினை மேலும்மேலும் இருக்கம் செய்யவே முயன்றன. இதனால் சமணமும் பௌத்தமும் எளிய மக்களின் சமயங்களாகவும் பிற வைதீக சமயங்கள் அதிகார வர்க்கத்தினரின் சமயமாகவும் விளங்கின: விரிவடைந்தன. கடைசியில் எளிய மக்களின் குரல்களை நெறிக்கப்பட்டதோடு அதுசார்ந்த, அவர்கள் சார்ந்திருந்த சமயங்களும் நாம் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு துயரிழைத்து அழித்தொழிக்கப்பட்டன என்பதே வரலாறாகும். இதற்கிடையே மக்களோடு நெருங்கி இருந்த சமணமும் பௌத்தமும் பல்வேறு இலக்கியங்களை வழங்கியுள்ளன. இவற்றில் பௌத்த சமயத்தின் கருத்துகள் மற்றும் அவர்களின் இலக்கியப்பணிகளோடு மணிமேகலைக் காப்பியத்தில் அமைந்துள்ள 'ஆதிரை பிச்சையிட்ட காதையின்' உள்ளடக்கப் பின்புலம் ஆகியவற்றை விளக்குமுகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பௌத்தமும் கோட்பாடும்**

மனித வாழ்வில் குறிப்பாக எளியமக்களின் வாழ்வில் அமைதியை விரும்பும் பௌத்தம் அது தொடக்க காலம் முதல் இன்று வரை தன் குணத்தை மாற்றாமல் இருப்பதனால்தான் பௌத்தம் இன்றுவரை பலரும் போற்றி வணங்கும் மதமாக இருந்து வருகிறது. "பௌத்தம் என்றைக்குமே பலரையும் ஈர்க்கிற விஷயமாக இருந்திருக்கிறது. வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களில் அது தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டும் விரும்பப்பட்டும் வந்திருக்கிறது. தனிநபர்கள் பௌத்தக் கொள்கைகளின் வாயிலாக தங்களையே உணர்ந்துகொண்ட சம்பவங்களைத் தாராளமாய்க் கேட்டிருக்கிறோம். பௌத்த சிந்தனைகள் பலரது மன மாற்றத்திற்கும், அதனைத் தொடர்ந்து வாழ்க்கை மாற்றத்திற்கும் உதவியுள்ளன"[2] (டி. தர்மராஜ், அயோத்திதாசர்: பார்ப்பனர் முதல் பறையர் வரை. ப. 64.) என்ற கருத்தின் வழி பௌத்த சமயமானது இந்திய மக்களின் வாழ்நிலையில் எத்தகு முக்கியத்துவம் பெற்றிருந்தது என்பதை நாம் உணாந்துகொள்ள முடிகிறது. இன்றும்கூட பௌத்தத்தின் தேவை சீரிய முறையில் அமைந்திருப்பதை நாம் உணர்கிறோம். அந்தளவிற்கு பௌத்தக் கொள்கைகள் மக்களின் மனத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதோடு மனித வாழ்க்கைக்கு, மக்களுக்கு ஏற்ற சமயமாக இருக்கிறது.

பல்வேறு சிறப்புகளைப் பெற்றிருந்த இச்சமயம் ஏன் இந்தியாவில் செல்வாக்கிழந்தது அல்லது அழிந்து போயிற்று என்ற கேள்விக்கு மேற்சுட்டப்பட்ட கூற்றினை நாம் உற்றுநோக்குகையில் அதன் உண்மை தெளிவாக விளங்கும். இதுகுறித்து மயிலை சீனி. வேங்கடசாமி கூறும்போது, "உலகத்திலேயே மிகப்பெரிய சனத்தொகையுடைய மதம் பௌத்த மதம். ஆனால் பௌத்த மதம் தோன்றிய இந்தியத் தேசத்திலே பௌத்தர்கள் எண்ணிக்கையில் மிகக் குறைவாகவே உள்ளனர். சைவ வைணவ மதங்களாகிய 'இந்து மதம்' இந்தியாவில் பௌத்த மதத்தை அழித்துவிட்டது. பௌத்த நாடாகிய சீனா, பர்மா, சியாம், திபெத்து. இலங்கை முதலிய நாடுகளில் வாழும் மக்கள் புத்தர் தோன்றிய இந்திய நாட்டை இன்றும் புண்ணிய பூமியாக கருதிப் போற்றுகின்றனர். அந்நாட்டு மக்கள் ஆண்டுதோறும் கூட்டம் கூட்டமாகப் 'புத்தகயாவிற்கு' யாத்திரை செல்கிறார்கள். இந்தியராகிய நாம், கௌதம புத்தர் பௌத்த மதத்தை உண்டாக்கினார் என்று சரித்திரப் புத்தகத்தில் படித்துவிட்டு அம்மட்டும் நின்று விடுகிறோம்"[3] (மயிலை. சீனி. வேங்கடசாமி ஆய்வுக்கட்டுரைகள் தொகுதி.3. ப. 34) என்று வருத்தங்கலந்த தொனியில் கூறுவதை நாம் உற்றுநோக்க வேண்டியுள்ளது. மயிலை சீனி. வேங்கடசாமியின் கூற்று பௌத்தத்திற்கு ஏற்ற கருத்தாக அமைகிறது. இதில் பௌத்த சமயம் இந்திய நிலப்பரப்பில் அழிந்து போவதற்குக் காரணமாக இந்து மதமாகிய சைவமும் வைணவமும்தான் காரணம் என்றுரைக்கிறார். மேலும், இந்தியப் பெருவெளியில் நீக்கமற நிறைந்து வருணாசரமத்தை தூக்கிப் பிடிக்கும் இந்துமதம் வர்ண பேதம் பார்க்கும் சமயம் இன்றுவரை செல்லுமிடமெல்லாம் தன்தோளில் தூக்கிச் சுமந்துகொண்டே இருக்கிறது என்பதுதான் பேருண்மையும்கூட. இதுகுறித்து அண்ணல் அம்பேத்கர் கூறுகையில், "இஸ்லாமியரின் படையெடுப்புகளால்தான் இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சியடைந்தது"[4] (டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர், பேச்சும் எழுத்தும். தொகுதி. 3. ப. 257) என்பது அண்ணலின் வாதமாகும். இது ஏற்புடைய கருத்தாக இருக்கிறது. எனவே, உலக வரலாற்றில் ஒவ்வொரு இனமும் சமயமும் பல்வேறு படையெடுப்புகளாலேயே அழித்தொழிக்கப்பட்டுள்ளன என்பதை நன்கு உணர்ந்துகொள்ளமுடிகிறது. தொடக்ககாலப் போர்முறைகளில் பெரும்பாலும் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கே போர் நடந்தேறியுள்ளது. அந்த அடிப்படையில் இசுலாமியர்களின் படையெடுப்பு பௌத்த சமயம் இந்தியாவில் வீழ்ச்சியடைந்ததற்கு முதன்மைக் காரணமாக இருந்திருக்கின்றன என்பதை ஏற்கும் கருத்தாக உள்ளது. பௌத்தம் இந்தியாவில் வீழ்ச்சியினைச் சந்தித்தாலும் உலக நிலப்பரப்பில் இன்றும் தன் கோட்பாடுகளைப் பறைசாற்றிய வண்ணம் இருந்து வருவது ஆழ்ந்து நோக்கத்தக்கது. அதற்குக் காரணம் பௌத்தம்

முன்வைக்கும் கோட்பாடுகளே ஆகும். மானுட சமூகத்தின் ஒற்றுமையைப் பேணிக்காக்கத் தொடங்கி உயிர்க்கொலை. ஆன்மவிடுதலை, ஆசையின்மை, துறவறம் போன்ற அன்புவயப்பட்ட பல்வேறு சிந்தனைகளை முன்வைக்கிறது. இதுவே பௌத்தத்தின் முழுமைப் பொருளாகவும் உள்ளன.

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்ற கோட்பாட்டினை பௌத்த சமயம் மிகவும் அழுத்தமாக வலியுறுத்துகிறது. மனிதன் சிற்றின்பத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளும்போதே அவனுக்கு எல்லாவிதமான துன்பங்களும் வந்து சேர்கின்றன. ஆகவே அதனை விட்டகலவேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. அதற்கு எட்டுவகையான விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்று வகுக்கிறது. அதனை 'அட்டசீலம்' என்பர். அதாவது அட்டசீலம் என்பது நல்ல நம்பிக்கை, நல்லெண்ணம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்முயற்சி, நற்சாட்சி, நல்ல தியானம் என்பது பௌத்தக் கோட்பாடாகும். பௌத்தம் இத்தகு உயர்ந்த தத்துவத்தை தன்வசம் வைத்திருந்தாலும் அது அழிந்துவிட்டதாக மீண்டும்மீண்டும் வலிந்து சொல்தவற்குக் காரணங்கள் இல்லாமலில்லை. அதனாலேயே அயோத்திதாச பண்டிதர் "உலகெங்கும் புத்தரென்று வழங்கும் நமது குலகுருவாகிய ஒப்பிலா அப்பன் சகல தேசங்களிலுஞ் சென்று ஞானநீதிகளைப் போதித்து மனிதன் கடைத்தேறும்படியான பேரின்பானுபவத்தை அருளிச் செய்தவர்"[5] (ஞான. அலாய்சியஸ், அயோத்திதாசர் சிந்தனைகள், தொகுதி -2, ப.22) என்றும் பௌத்த சமயம் தமிழ் நிலத்தில் அழியவில்லை இன்னும் உயிர்ப்போடு செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்ற வாதத்தை முன்வைக்கிறார். மேலும், பௌத்தம் தம்முடைய கோட்பாடுகளை வேறுவடிவத்தில், மக்கள் மத்தியில் செயலூக்கம் பெற்றிருப்பதை மையச்சரடாக வைத்து 'வாழும் பௌத்தம்' என்ற சிந்தனையில் பார்க்கிறார் அயோத்திதாசர்.

**தமிழும் பௌத்தமும்**

'இனிமையும் நீர்மையும் உடையது தமிழ்' என்ற பிங்கல நிகண்டின் கூற்று உயர்வுநவிற்சியில் கூறப்பட்டதன்று. உள்ளபடியே நீரின் தண்மையும் இலக்கியத்தைப் படிக்கின்றபோதும் படைக்கின்றபோதும் அதனால் ஏற்படுகின்ற இனிமையையும் சில சொற்களுக்குள் அடக்கிவிடமுடியாது. அதனால்தான் மதம்பரப்பும் நோக்குடன் வந்தவர்களையும் தமிழ் எனும் நீர்ச்சுழல் தன்வயப்படுத்திவிட்டதை நாம் நிறையப் பார்த்திருக்கிறோம். தன்னுடைய பெயரைத் தமிழ்ப்படுத்திக் கொண்டதையோ (வீரமாமுனிவர் ஜி.யூ. போப் போன்றோர்) தன்னைத் தமிழ் மாணவன் என்று கூறிக்கொண்டதற்குப் பின்னால் எந்தவொரு அரசியல் சாயமும் அவ்வளவு எளிதாகப் பூசிவிடமுடியாது. அதுபோன்றே இந்தியாவில் தோன்றிய மதங்களில் குறிப்பிடத்தக்க மதங்களாக

சமணமும் பௌத்தமும் விளங்குகின்றன. இவ்விரு சமயங்களும் தன்னை முழு தமிழ்சமயங்களாகவே ஆக்கிக்கொண்டன. குறிப்பாக, 'தமிழ் பௌத்தம்' என்று சொல்லும் அளவிற்கு தமிழ்மொழியானது எவரையும் எவற்றையும் வசப்படும் தன்மை கொண்டாதாக இருந்து வருவதை நாம் மறுக்கவியலாது.

தமிழ் மொழிக்கு பௌத்த சமயத்தின் பங்களிப்பு மிகுதி எனலாம். அவற்றைச் சிறப்பித்துக் கூறும் அளவிற்குத் தன்பங்கைச் செவ்வனே செய்துள்ளது. பிற சமயத்தைப் போன்றே இலக்கியம் இலக்கணம் தர்க்கம் போன்ற துறைகளில் தன்னுடைய பங்களிப்பை செலுத்தியுள்ளன. இருப்பினும் அரசியலில் செல்வாக்கை செலுத்தினாலும் வைதீக சமயங்களின் தாக்கத்தினாலும் பல்வேறுபட்ட நூல்கள் அழிக்கப்பட்டன என்பது கட்டுரையாளரின் கருத்தாக இருக்கிறது. இங்ஙனம் பௌத்தர்கள் எண்ணற்ற நூல்கள் இயற்றியதாகத் தெரிகிறது. நீலகேசி, வீரசோழிய உரைகளில் பௌத்த சமய செய்யுட்கள் பல எந்நூல்களினின்று எடுத்தாளப்பட்டள்ளன என்றறிய இயலா வகையில் உள்ளன. அன்றியும் அறிஞர் ரிஸ் டேவிட்ஸ் (Rhys David's) என்பார், "கி.பி. நான்காம் நூற்றாண்டில் உதித்த புத்த தத்தர் பாலிமொழி நூல்கள் பலவற்றிற்கு அம்மொழியிலேயே உரைகள் பல எழுதியுள்ளார். அவற்றில் தென்னகத்தில் வழங்கிய பௌத்தக் கொள்கைகள் பலவற்றை எடுத்துக்காட்டியுள்ளார். அக்கருத்துக்களை இவர் அந்நாளில் இருந்த தமிழ் பௌத்த நூல்களினின்றே எடுத்திருத்தல் கூடும்"[6] (மது. ச. விமலானந்தம், தமிழிலக்கிய வரலாறு. ப.114) என்ற கருத்து மேற்கூறிய கருத்திற்கு அரணாக அமைகிறது. பௌத்த சமயம் அக்கப்பூர்வமான பல இலக்கியப் பிரதிகளைத் தமிழ்மொழிக்குத் தந்திருந்தாலும் சமயப்பூசல்களின் காரணமாக அழித்தொழிக்கப்பட்டன என்பது உண்மையே. இவற்றிற்கிடையில் மணிமேகலை, வீரசோழியம், குண்டலகேசி, விம்பிசாரகதை, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், அபிதர்மாவதாரம் போன்ற நூல்கள் இன்றும் பௌத்தரின் தமிழ்ப்பணியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. பல்வேறு அழிவுகளுக்கு மத்தியிலும் சில நூல்கள் உயிர்ப்போடிருப்பது அதன் சிறப்புத் தன்மைகளைக் காட்டுவதாக உள்ளன. மேலும், 'பௌத்தரின் பணியைப் பறைசாற்ற மணிமேகலை ஒன்று போதும்' என்ற மது.ச. விமலானந்தத்தின் கூற்றின் அடிப்படையில் நோக்குகையில் மணிமேகலை எனும் காப்பியம் நிலைக்கும் வரையில் பௌத்தம் மறைமுகமாகச் செயலாற்றிக் கொண்டிருக்கும் என்பது வெளிப்படை.

**மணிமேகலையெனும் துறவு**

'மணிமேகலையெனும் துறவு' தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியமாகும். இது பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களை எளிதில் உணரும் வகையில்

*எளிய பதங்களின் மூலம் விளக்குகிறது. அறங்களில் சிறந்தது உணவு வழங்குவது என்ற உயர்ந்த சிந்தனையைக் கொண்டு படைக்கப்பட்ட உன்னதக் காப்பியம். பல்வகைச் சமயங்களின் கருத்துக்களை செவிசாய்த்துக் கேட்டு அதற்கு தக்க பதில் கொடுப்பதின் மூலமாக சமய நல்லிணக்கம் பேணிய காப்பியமாகத் திகழ்கிறது. நகரங்களின் அமைப்பு விழாக்களின் விவரணை ஓவியம் போன்ற கலைகளைப் பதிவிட்ட கலைக்காப்பியமாகவும் மணிமேகலை திகழ்கிறது. மொத்தத்தில் மணிமேகலை எனும் காப்பியம் மீண்டும் மீண்டும் அழுத்தமாக வலிறுத்த நினைப்பது,*

*"காணார் கேளார் கான்முடப் பட்டோர்*
*பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்*
*யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி"[7]*
*(மணிமேகலை,ஆபுத்திரன் திறமறிவித்த காதை, பாடலடிகள், 111-113)*

*என்றும்,*

*"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்*
*உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத் தோரே"[8]*
*(மணிமேகலை, பாத்திரம் பெற்ற காதை, பாடலடிகள், 95-96)*

*என்பதும் சாதிமதம் பாராமல் பசியால் வருந்தும் மனித உயிர்களுக்கு உணவுகொடுத்துக் காப்பாற்றும் உயர்ந்த கோட்பாட்டையே ஆகும். காரணம் என்னையெனில் உலகில் நிகழ்கின்ற அனைத்துக் குற்றங்களுக்கும், தீமைகளுக்கும் அடிப்படையாக இருப்பது பசி எனும் தீயே. அதனை முறையாக குறைக்கின்ற போதோ அல்லது அணைக்கின்ற போதோ உலகத்தீமைகள் குறையும் என்பது பௌத்தர்களின் எண்ணமாக இருந்திருக்கிறது. அதன் வெளிப்பாடே பசியைப் போக்கும் 'அமுதசுரபி' எனும் பாத்திரத்தைக் கையிலெடுக்கக் காரணமாக அமைகின்றது. உலக அறங்களில் உன்னத அறம் உணவளிப்பதே என்ற ஆழமான கருத்தியலை மணிமேகலைக் காப்பியம் வற்புறுத்துகிறது. மணிமேகலையைப் பொருத்தமட்டில் துறவுடன் சேர்த்துப் பெண்ணின் பெருமைகள், துறவு வாழ்வில் பெண்கள், விசாலமான வெளி, பிற சமயங்களில் உள்ள கோட்பாடுகளை அறிந்துவைத்தருத்தல், சரிசமமாக சொற்போர் நிகழ்த்துதல், தான் நினைத்தவாறு வாழ்வினை அமைத்துக்கொள்ளுதல் போன்ற பல்வேறு சமூக சமநிலை பேசப்பட்டிருப்பினும் ஆங்காங்கு ஆண்களின் ஆதிக்கமோ அல்லது சமூக மைய நீரோட்டத்தில் ஊறிப்போன ஆணின் பெருமை பேசப்படுவதோ இல்லை என்று சொல்வதற்கில்லை. குடும்ப உறவைப் பொருத்தமட்டில் பெண் தனக்கு வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நின்றே போராடுகிறாள். ஆண் தன் எல்லையை மீற மீண்டுவிடுவதையே மணிமேகலையும் காட்டுகிறது. மணிமேகலை எனும் மதுவொழிப்புக் காப்பியத்தில் சிலம்பைப் போன்று முப்பது காதைகளும் மூன்று*

காண்டங்களும் இருக்கின்றன. இவற்றில் பதினாறாவது காதையான ஆதிரை பிச்சையிட்ட காதையில் பெண்ணுக்கான ஒழுக்கம் பற்றியும் கணவன் மாபாவியாக இருந்தாலும் அவன் இறந்த பிறகு தானும் இறந்துவிடவேண்டுமென்ற உடன்கட்டை ஏறும் வழக்க முறையையும் ஆணின் பெருமைகளும் இக்காதையில் பேசப்படுகின்றன. சமூகத்தில் ஆணும் பெண்ணும் சமம் என்று திரும்பத்திரும்ப உரைத்தாலும் அது வெறும் எழுத்தாகவே இருக்கிறதோ என்ற ஐயம் எழுகிறது. அதை தவிர்க்க முடியவில்லை.

**ஆணாதிக்கமும் ஆதிரையிட்ட பிச்சையும்**

பெத்தக் காப்பியமான மணிமேகலையில் ஆதிரையை பின்வருமாறு அறிமுகம் செய்கிறார் சாத்தனார்.

''குளனணி தாமரைக் கொழுமலர் நாப்பண்
ஒருதனி யோங்கிய திருமலர் போன்று
வான்றரு கற்பின் மனையுறை மகளிரிற்
றான்றனி யோங்கிய தகைமைய ளன்றோ
ஆதிரை நல்லா ளவண்மனை யிம்மனை
நீபுகல் வேண்டு நேரிழை யென்றனள்''[9]
(மணிமேகலை, பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை, பாடலடிகள் 75-80)

என்று காயசண்டிகை மணிமேகலையைப் பார்த்துக் கூறுவதாக சாத்தனார் அறிமுகம் செய்கிறார். இதன் பொருள் குளத்தில் அழகுதரும் மலர்களுக்கு மத்தியில் பூத்திருக்கும் ஓர் அழகிய மலர்போன்றும், மழை வேண்டின் பெய்விக்கும் சிறந்த கற்புடைய பல மகளிர்களில் ஒருத்தியாக தனித்த சிறப்புகளோடு வீட்டில் தங்கியிருக்கக்கூடிய ஆதிரை என்று அறிமுகம் செய்விக்கிறார். அத்துடன் கதைத் தொடர்ச்சியில் ஆதிரையின் கணவனான சாதுவனை பின்வருமாறு அறிமுகம் செய்கிறார்.

''ஆதிரை கணவ னாயிழை கேளாய்
சாதுவ னென்போன் றகவில னாகி
அணியிழை தன்னை யகன்றனன் போகிக்
கணிகை யொருத்தி கைத்தூ ணல்க
வட்டினுஞ் சூதினும் வான்பொருள் வழங்கி''10
(மணிமேகலை, பாத்திரம் கொண்டு பிச்சை புக்க காதை, பாடலடிகள் 75-80)

என்று நல்லொழுக்கம் இல்லாதவனான சாதுவன் அழகிய அணிகலன் அணிந்த ஆதிரையை விட்டு கணிகையருடன் வட்டாடுதல் மற்றும் சூது விளையாடி தன்னிடமிருந்த வானலாவிய பொருட்களை இழந்துவிட்டான் என்று அறிமுகம் செய்கிறார். பெண் என்பவள் கற்பொழுக்கம் உடையவளாகவும் ஆண் என்பவன் தன்மனைவியை விடுத்து வேறுபெண்களோடு இருக்கும் தன்மையிலும் படைத்துக்காட்டுகிறார். சரி, இது அக்காலத்து வழக்கம் என்று காட்டினாலும் தொடர்ச்சியாக ஆண் என்பவன் அதிகாரம் செய்யும் இடத்தில் இருப்பதையே

*இக்காதையில் பார்க்கப்படுகிறது. மேலும், தவறு செய்த சாதுவன் தான் செய்த தவற்றையெல்லாம் உணர்ந்தவனைப் போல வீடு திரும்புகிறான். அவனைப் பார்த்து ஆதிரை ஒன்றுமே கேட்கவில்லை. அவன் விருப்பப்படியே தொடர்கிறது. இழந்த செல்வங்களை மீட்கும் பொருட்டு கடல்கடந்து வாணிகம் செய்யச் செல்கிறான். அப்போது கடல் சுழலில் சிக்கி மரக்கலம் உட்பட பலரின் நிலை என்னவாயிற்று என்று தெரியாத அளவில் சிலர் மட்டுமே தப்பிப் பிழைத்துத் தாயகம் திரும்புகின்றனர். மற்றவர்கள் பற்றி கேட்கின்றபொழுது வந்தவர்கள் சாதுவன் உட்பட பலர் இறந்திருக்கக்கூடும் என்றுரைக்க அதுகேட்டு,*

*"டுரீ ரேயோ வொள்ளழ லீமம்*
*தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்*
*சுடலைக் கானிற் றெடுகுழிப் படுத்து*
*முடலை விறகின் முளியெரி பொத்தி*
*மிக்கவென் கணவன் வினைப்பய னுய்ப்பப்*
*புக்குழிப் புகுவோன்' னென்றவள் புகுதலும்"[11]*
*(மணிமேகலை. ஆதிரை பிச்சையிட்ட காதை, பா.அடி. 23-28)*

*என்று ஆர்ப்பரிக்கிறாள். கணவனை இழந்த நான் இனி வாழ்வதில் அர்த்தமில்லை என்று அழுது வருந்தி பிணங்களை எரிக்கும் சுடுகாட்டில் எனக்கும் நெருப்பு மூட்டுங்கள் நான் அதில் புகுந்து என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன் என்று உடன்கட்டை ஏறத் தயாராக இருக்கும் பெண்ணைப் பார்த்து அவ்வூர் மக்கள் வருத்தம் ஏதும் தெரிவிக்காமல் அவளின் துயரமொழியினை நிறைவேற்றுகின்றனர். ஆக, கணவனையிழந்த பெண் வாழக்கூடாது என்பதில் சமூகம் முன்முனைப்பாக இருந்தது என்ற தொனியில் காதையின் ஓட்டம் நிகழ்கிறது. இங்கு ஒருவர்கூட தீ புகப்போகும் பெண்ணை தடுத்து நிறுத்தவில்லை. ஆசிரியரும் நெருப்பிற்குள் இறக்கியே கதையை நகர்த்துகிறார். ஆக, பௌத்தம் உடன்கட்டை ஏறும் மரபினை ஆதரித்ததோ என்ற ஐயம் இங்கு எழுகிறது.*

*கடலின் சீற்றத்தில் சிக்கிய சாதுவன் இறக்கவில்லை என்ற செய்தி அறிந்ததும் எந்த ஒரு எதிர்வினையும் ஆற்றாமல் தன் இல்லத்தை; நோக்கிப் புறப்படுகிறாள். அப்போது அவளுடைய கற்பொழுக்கத்தைப் பார்த்து அங்கு கூடியிருக்கும் பெண்களெல்லாம் வாழ்த்தி வணங்கி வியந்து நின்றனர் என்று ஆசிரியர் காட்சிப்படுத்துகிறார். வியக்கின்ற பெண்களும் பெய்யென்று சொன்னால் மழை பெய்யும் என்ற தன்மையில் கற்பில் வழுவாமல் இருப்பவர்களாகச் சித்திரிக்கிறார். தொடர்ந்து சாதுவன் நாகர்கள் வாழும் மலையில் கரை ஒதுங்குவதும் அவர்களின் உபசரிப்பை,*

*"நம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து*
*வெங்களு மூனும் வேண்டுவ கொடுமென"[12]*
*(மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை, பா.அடி.76-77)*

என்பதை நிராகரித்துவிட்டு அதனால் ஏற்படும் தீமைகள் குறித்தும் விவரிக்கும் முறையும் காட்டப்படுகிறது. சாதுவனின் விளக்கத்தில் மயங்கிய நாகரின மக்கள் அவனுடைய வேண்டுகோளை ஏற்கின்றனர். பிறகு தங்களிடம் உள்ள துகில், நறுமணச்சாந்து என்று பல்வேறு பொருட்களையும் மிகுதியாகக் கொடுத்து ஊருக்கு அனுப்பி வைக்கின்றனர். இவ்விடத்தில் ஒழுக்கம் கெட்ட பாதையில் சென்ற ஆண் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்லப்படுகிறான். அவனுடைய தவறுகளுக்காக வருந்துவதோ, தண்டித்துக்கொள்வதோ எதுவும் இல்லை. ஆனால் எந்தத் தவறும் செய்யாத ஆதிரை நெருப்பில் இறங்கச் செய்கிற செயலை ஆணின் அதிகாரம் என்றே கூறலாம்.

**முடிவுரை**

மணிமேகலைப் பனுவலில் உயிர்பிழைத்து மீண்டு வந்த சாதுவன் தனக்காகக் காத்திருக்கும் ஆதிரையோடு சேர்ந்து பல தானதர்மங்கள் செய்தனர் என்று காயசண்டிகை கூறுவதாக சாத்தனார் கூறிமுடிக்கிறார். அத்தோடு நில்லாமல் கணவன் இருக்கும் போதும் இறந்துவிட்டான் என்று அறிந்துகொண்டபோதும் மீண்டும் வந்துவிட்டான் என்ற மூன்றாம் நிலையிலும் எத்தகு எதிர்வினையும் காட்டாமலிருக்கும் ஆதிரையின் கையில் பிச்சை பெறுவதை ஏன் விரும்புகிறார்கள். பெண் என்பவள் அனைத்தையும் சகித்துக்கொண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்ற பழமைவாதத்தைப் புதுப்பிப்பதற்காவா அல்லது பெண்ணின் கற்பு என்பது எதிர்கதையாடல் செய்யாமல் இருப்பதை உணர்த்தவா என்ற பல்வேறு எண்ணங்கள் தோன்றுகின்றன. உலக உயிர்களில் ஏற்றத்தாழ்வு இல்லை என போதிக்கும் பௌத்தம் ஏன் இங்கு பெண்ணை மீண்டும் சிறுமைப்படுத்துகிறது என்ற வினா எழுகிறது. மொத்தத்தில் ஆதிரை இட்ட பிச்சையானது உலகில் இருக்கும் பசிப்பிணியைப் போக்கும் அருமருந்தாகிய உணவா அல்லது தீமைத் துன்பத்தைச் செய்த சாதுவனுக்கான மறுவாழ்க்கை பற்றியதா என்ற கேள்வி இங்கு தொக்கி நிற்கிறது.

**துணைநூல் பட்டியல்**


1. அம்பேத்கர், பி.ஆர், பேச்சும் எழுத்தும், அம்பேத்கர் அறக்கட்டளை, புதுதில்லி.1995. தொகுதி 3.
2. சாமிநாதையர். உ.வே, மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை. ஏழாம் பதிப்பு 1981.
3. சின்னச்சாமி. சு, திருவள்ளுவரின் வாழ்க்கை வரலாறு, எஸ்தர் பிரிண்டர்ஸ், தென்காசி. 2021.
4. ஞான அலாய்சியஸ், அயோத்திதாசர் சிந்தனைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, 1999. தொகுதி -2.
5. விமலானந்தம். மது. ச, தமிழிலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை. 2014.
6. மயிலை. சீனி. வேங்கடசாமி ஆய்வுக்கட்டுரைகள், பாவை பப்ளிகேஷன், சென்னை 2001. தொகுதி.3.
7. முத்துச்சண்முகம், இரா. பிரேமா (ப.ஆ), இரட்டைக் காப்பியக் கிளைக் கதைகளும் துணைக்கதைகளும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. டிச.2014.
8. தர்மராஜ். டி, அயோத்திதாசர்: பார்ப்பனர் முதல் பறையர் வரை. கிழக்கு பதிப்பகம். சென்னை. 2019.
9. வெங்கடேசன். சு, கலாச்சாரத்தின் அரசியல், வையை பதிப்பகம், மதுரை. 2007.